# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**விளம்பர எண். 590**

**அறிவிக்கை எண்**: 10 /2021 **நாள்**: 25.08.2021

தமிழ்நாடு பொதுப் பணியில் அடங்கிய **இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கு நடத்துநர்** பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கான எழுத்துத் தேர்விற்கு 24.09.2021 அன்று வரை இணைய வழி மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**எச்சரிக்கை**

- **தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் விண்ணப்பதாரரின் தரவரிசைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.**
- **பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி, தவறான வழியில் வேலைவாங்கித் தருவதாகக் கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.**
- **இதுபோன்றதவறானமற்றும்நேர்மையற்றவர்களால்விண்ணப்பதாரருக்கு ஏற்படும்எவ்விதஇழப்புக்கும்தேர்வாணையம்எந்தவிதத்திலும்பொறுப்பாகாது.**
- **இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகவல்களுக்கும் விண்ணப்பதாரரே முழுப் பொறுப்பாவார். விண்ணப்பதாரர், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும் பொழுது, ஏதேனும் தவறு ஏற்படின், தாங்கள் விண்ணப்பித்த இணையச் சேவை மையங்களையோ/*பொதுச் சேவை மையங்களையோ குற்றம் சாட்டக் கூடாது. விண்ணப்பதாரர் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர், நன்கு சரிபார்த்தப் பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.***

விண்ணப்பதாரர்கள் பதிவுக்கட்டணமாக ரூ.150/-ஐ (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) செலுத்தி தங்களது அடிப்படை விவரங்களை நிரந்தரப்பதிவு மூலமாக (OTR) கட்டாயமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த நிரந்தர பதிவு முறையில் பதிவு செய்த விண்ணப்பங்கள் பதிவு செய்த நாளிலிருந்து 5 வருட காலங்களுக்கு செல்லத்தக்கதாகும். அதன் பிறகு உரிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். நிரந்தர பதிவானது எந்த ஒரு பதவிக்கான விண்ணப்பமாக கருதப்படமாட்டாது.

**பணியிடங்கள் பற்றிய விவரங்கள்**

| பதவியின் பெயர் மற்றும் பதவிக் குறியீட்டு எண் | பணியின் பெயர் மற்றும் பணிக்குறியீட்டு எண் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கு நடத்துநர் (பதவிக் குறியீட்டு எண்: (1797) | தமிழ்நாடு பொதுப் பணி (குறியீட்டு எண்: 035) | 50 | ரூ.56,100 – 1,77,500/- (நிலை 22) |

***குறிப்பு:-***

குறிப்பிட்டு சொல்லப்பட்டிருந்தாலன்றி, அறிவிக்கப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையானது தோராயமானதாகும். மேலும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டதாகும். விவரங்களுக்கு விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 11 (A)-ஐக் காண்க.

2. ***காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல்***

*இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். இப்பதவிக்கான பணி பகிர்மானப் பட்டியல் பின்னர் அறிவிக்கப்படும்.*

3. ***முக்கியமான நாட்கள் மற்றும் நேரம்:-***

| | | |
|---|---|---|
| அ | அறிவிக்கை நாள் | 25.08.2021 |
| ஆ | இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்குரிய கடைசி நாள் | 24.09.2021 |
| | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | |
| இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கு நடத்துநர் | முதல்நிலை தேர்வு | 06.11.2021 முற்பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரை |
| | முதன்மைத் தேர்வு | தேதி பின்னர் அறிவிக்கப்படும். |

***குறிப்பு:-***

***இத் தேர்வின் செயல்பாடுகளுக்கான உத்தேச கால நிர்ணயம் தொடர்பாக பிற்சேர்க்கை – V -ஐ காண்க.***

***4. தகுதிகள்***

***அ. வயது வரம்பு*** (01.07.2021 ***அன்றுள்ளபடி***)

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | அதிகபட்ச வயது |
|---|---|---|
| 1 | ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ(வ), மி.பி.வ., (ம) சீ.ம., மி.பி.வ, பி.வ., பி.வ.(மு) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |
| 2 | "ஏனையோர்" | 34 வயது நிறைவடைந்தவராக இருத்தல் கூடாது. |

***விளக்கம்:-***

*"உச்ச வயது வரம்புஇல்லை" என்றால் விண்ணப்பதாரர் விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்றோ/ பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட நாளன்றோ மற்றும் பதவியில் அமர்த்தப்பட்ட நாளன்றோ 60 வயதினை பூர்த்தி செய்திருக்க கூடாது.*

***வயது வரம்புச் சலுகை***

***நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள்:-***

*நிர்ணயிக்கப்பட்ட வயதுவரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயதுவரம்புச் சலுகை பெறத் தகுதியுடையவராவார்கள்.*

*[தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 64-ல் குறிப்பிட்டுள்ளவாறு]*

(i) ***முன்னாள்இராணுவத்தினருக்கு***

*அ) ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., மி.பி.வ(வ), மி.பி.வ(ம)சீ.ம., மி.பி.வ, பி.வ., மற்றும் பி.வ(மு) தவிர ஏனைய வகுப்பினைச் சார்ந்தவர்களுக்கு 48 வயது வரை சலுகை வழங்கப்படும்.*

*[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 63-ல் குறிப்பிட்டுள்ளவாறு]*

*ஆ) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு / பணி / பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.*

*[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3(j)ல் குறிப்பிட்டுள்ளவாறு]*

***ஆ) கல்வித்தகுதி ( 25.08.2021 அன்றுள்ளபடி)***

*விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்படிப்பினைஅல்லது அதற்கு இணையான படிப்பினை பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் அல்லது பல்கலைக் கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிரு ந்து பெற்றிருக்க வேண்டும்.*

| *பதவியின் பெயர்* | *கல்வித்தகுதி* |
|---|---|
| ***இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கு நடத்துநர்*** | i) Must possess B.L. degree,<br>ii) Must be a member of the Bar,<br>iii) Must possess adequate knowledge of Tamil<br>and<br>iv) **Experience:** Must have had active practice in '**criminal courts**' for a period of not less than *five* years**.** |

***குறிப்பு***

1. ***நிர்ணயிக்கப்பட்டஇளங்கலைப் பட்ட கல்வித் தகுதியினை 10+ 2 (அதற்கு இணையானத் தகுதி) + இளங்கலைப் பட்டம் [தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 25-ல் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றிருக்க வேண்டும்]. பட்டப்படிப்பிற்கான இறுதி தேர்வு முடிவு வெளியிடப்பட்ட நாளானது அறிவிக்கை நாளன்றோ அல்லது அதற்கு முந்தைய நாளாகவோ அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும். (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 20(4) (iv)-ல் குறிப்பிட்டுள்ளவாறு).***

2. ***இணைக் கல்வித் தகுதி பெற்றிருப்பதாக உரிமை கோரும் விண்ணப்பதாரர் இணைக்கல்வி என அறிவிக்கப்பட்ட அரசாணையினை சான்றாவணமாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவ்வரசாணையானது தேர்வுக்கான அறிவிக்கை நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வெளியிடப்பட்டிருக்க வேண்டும். மேலும், அவ்வரசாணையினை தேர்வாணையம் கோரும் பொழுது சமர்ப்பிக்க அல்லது பதிவேற்றம் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அரசாணை இத்தேர்வின் அறிவிக்கை நாளுக்கு பிறகு வெளியிடப்பட்டிருப்பின் அஃது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.***

*[விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 9ன் குறிப்பினைக் காண்க].*

**EXPLANATION:**

(i) The expression "active practice in Criminal Courts" shall include the period of service rendered by a person as a temporary Assistant Public Prosecutor, Grade-II.

(ii) For this purpose, a person will be deemed to possess an adequate knowledge of Tamil, if he/ she has passed the S.S.L.C. examination or its equivalent examination with Tamil as one of the languages or studied the High School Course in Tamil Medium and passed the S.S.L.C. examination or its equivalent examination in Tamil Medium or passed the Second Class Language Test in Tamil conducted by the Tamil Nadu Public Service Commission.

[Explanation (i) under Section 21(1) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016] [Para 14(I)(i) of the Commission's 'Instructions to Applicants'.]

**NOTE:**

A certificate in the format prescribed in Annexure-II should be obtained from a **Senior Advocate** or from the **Presiding Officer** of........................Court in support of the applicant's claim regarding the period of active practice in Criminal Courts and kept ready before applying online.

**DEFINITION:**

The term "**Senior Advocate**" herein includes Additional Public Prosecutor/Public Prosecutor, President/Secretary of the Bar Associations and Advocates practicing for ten years and more in Taluks and Districts, besides the Senior Advocates practicing in the High Court and in the Supreme Court. (Letter Rc.No.3727/DOP/A1/2019, dated 22.04.2021 received from the Director of Prosecution)

**TRAINING:**

Every person appointed to the post of Assistant Public Prosecutor, Grade-II should on and from the date on which he/she joins duty, undergo training as prescribed by the Government. The training period shall count for probation and increment and during the training period he / she shall draw pay at the minimum in the time scale.

**AGREEMENT:**

Every person appointed to the post of Assistant Public Prosecutor, Grade-II should execute an agreement in the form prescribed by the Government binding himself / herself to serve the Government as Assistant Public Prosecutor, Grade-II, after the successful completion of training prescribed, for a period of two years or for such period as may be prescribed by the Government from time to time. If he / she resigns his / her post on grounds other than ill-health to be certified by the Civil Surgeon before the completion of the training period or

before the expiry of the period of agreement, he / she should refund the pay drawn during the training period to the Government.

(இ) உடற்தகுதி சான்றிதழ்

பணி நியமனதிற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள தரத்தில் உடற்தகுதிச் சான்றிதழைச் சமர்பிக்க வேண்டும்.

| நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் | உடற்தகுதி சான்றிதழ் படிவம் |
|---|---|
| பார்வை தரம்-III (அல்லது) அதற்கு மேம்பட்ட தரம் | செயல் அலுவலர் மற்றும் அமைச்சுப் பணி அல்லாத பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவம் |

தெரிவிற்கு வரும் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வைத் தகுதிச் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

5. கட்டணம்

| | | |
|---|---|---|
| அ) | பதிவுக் கட்டணம்<br>நிரந்திரப் பதிவுக்கட்டணம் (அ.ஆ(நி) எண்.32, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 01.03.2017-இன் படி திருத்தியமைக்கப்பட்ட கட்டணம்)<br>குறிப்பு<br>நிரந்தர பதிவில் பதிவு செய்த நாளிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவுறாத விண்ணப்பதாரர்கள், இத்தேர்வுக்கான பதிவுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர் | ரூ.150/- |
| ஆ) | தேர்வுக் கட்டணம்<br>குறிப்பு<br>கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியுடையவர்கள் தவிர பிற விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது முதல்நிலை தேர்வுக்கான கட்டணம் செலுத்த வேண்டும். | ரூ.100/- |
| இ | முதன்மைத் தேர்வு<br>முதல்நிலை தேர்வு முடிவு வெளியிட்ட பிறகு முதன்மைத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்திடம் இருந்து தகவல் பெற்ற பிறகு முதன்மைத் தேர்விற்கான கட்டணத்தை செலுத்த வேண்டும்<br>(கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியுடையவர்கள் தவிர பிற விண்ணப்பதாரர்கள்) | ரூ.200/- |

குறிப்பு

(1) விண்ணப்பதாரர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும். பயோமெட்ரிக் உள்ளிட்ட ஆதார் எண்ணுடன் தொடர்புடைய தகவல்கள், விண்ணப்பதாரர் அடையாளம் காணும் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படும். தேர்வாணையம் அத்தகவல்களை சேமிக்கவோ, யாருடனும் பகிரவோ செய்யாது. விண்ணப்பதாரர் ஒருமுறைப்பதிவில் தங்களது ஆதார் எண்ணினை இணைப்பதற்கான ஒப்புதலை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பதாரரின் உண்மைத் தன்மையினை உறுதி செய்வதற்காக மட்டும் Central Identities Data Repository-க்கு ஆதார் தொடர்புடைய விவரங்களை தேர்வாணையம் பகிர்ந்துக் கொள்ளும். வருங்காலத்தில் விண்ணப்பிக்க இருக்கும் விண்ணப்பதாரர் அனைவரும் புதிதாக ஒருமுறைப் பதிவு எண்ணை உருவாக்குவதற்கும் / புதுப்பிப்பதற்கும் / ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ஒருமுறைப் பதிவில் உள் நுழைவதற்கும், எந்த ஒரு தேர்வு அறிவிக்கைக்காக விண்ணப்பிப்பதற்கும் ஆதார் எண்ணினை இணைப்பது கட்டாயமானதாகும். "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி 2(B)-ஐ காண்க.

(2) ஒருமுறைப்பதிவு என்பது பதிவு செய்தநாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை செல்லுபடியாகும். ஐந்து ஆண்டுகள் முடிந்த பின்னர் விண்ணப்பதாரர் ஒருமுறைப்பதிவினை (One Time Registration)

அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தினைச் செலுத்தி கட்டாயம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு என்பது தேர்வுக்கான விண்ணப்பத்திலிருந்து மாறுபட்டதாகும். விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும், தனித்தனியே இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும். [விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" உள்ள பத்தி 2(C)-ஐ காண்க].

(3) நிரந்தர பதிவில் பதிவு செய்து பதிவுக்கட்டணமான ரூ50/- 01.03.2017க்கு முன் செலுத்தி தற்போது அனுமதிக்கப்பட்ட நிலையில் உள்ள மற்றும் 01.03.2017 பின் ரூ.150/- செலுத்தி நிரந்திர பதிவினை செய்தவர்கள் பதிவுக் கட்டணம் செலுத்த விலக்களிக்கப்படுவார்கள்.

தேர்வுக் கட்டணச் சலுகை:-

| வகை | சலுகை |
|---|---|
| 1) ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிடர்(அருந்ததியர்), | கட்டணம் செலுத்த தேவையில்லை |
| 2) பழங்குடியினர் | கட்டணம் செலுத்த தேவையில்லை |
| 3) மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (வ), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| 4) இசுலாமியரல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர் | மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை |
| 5) முன்னாள் இராணுவத்தினர் | இரண்டு முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 6) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 7) ஆதரவற்ற விதவைகள் | கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |

குறிப்பு

(i) முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட உரிமைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக்கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.

(ii) விண்ணப்பதாரர் பெறும் இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும்.

(iii) விண்ணப்பதாரர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டணவிலக்குத் தவறாகக் கோரும்பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகள் / தெரிவுகளில் கலந்துகொள்வதிலிருந்து ஒரு வருட காலத்திற்கு விலக்கி வைக்கப்படுவார்.

(iv) விண்ணப்பதாரர் தேர்வுக் கட்டணவிலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு "ஆம்" அல்லது "இல்லை" என்ற விருப்பங்களை கவனமாக தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார். விண்ணப்பம் வெற்றிகரமாக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், தெரிவு செய்யப்பட்ட விருப்பங்களைமாற்றம் செய்யவோ, திருத்தம் செய்யவோ இயலாது.

(v) விண்ணப்பதாரர், விண்ணப்பதாரர்களின் தன்விவரப் பக்கத்தின் Application History-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக் கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தங்களின் சொந்த நலன் கருதி கணக்கிட்டு வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

(vi) கட்டணச்சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது (விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளைப் பொருட்படுத்தாமல்) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒரு வாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும்.

(vii) அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவச வாய்ப்புகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர் / தேர்வுக் கட்டணச் சலுகையை பெற விரும்பாத விண்ணப்பதாரர் / தேர்வுக் கட்டணச் சலுகைக்கு தகுதியற்ற விண்ணப்பதாரர் தேர்வுக் கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு எதிராக "இல்லை" என்ற விருப்பத்தினை தெரிவு செய்ய

*வேண்டும். அவ்விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை மூலம் தேவையான கட்டணத்தினை பின்னர் செலுத்தலாம்.*

*(viii) விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்துடன் குறித்த நேரத்திற்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவில்லையென்றால், விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 6—ஐ காண்க.*

**6. தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை**

- *முதல்நிலை தேர்வுக் கட்டணம் ரூ.100/- ஐ (ரூபாய் நூறு மட்டும்) இணையவழியில் (இணைய வங்கி, பற்று அட்டை, கடன் அட்டை) விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளிற்குள் செலுத்த வேண்டும்.*
- *விண்ணப்பதாரர்கள் சேவைக் கட்டணமும் சேர்த்து செலுத்த வேண்டும்.*
- *விண்ணப்பதாரர்களின் கட்டணச் சலுகைக்கான தகுதியின் அடிப்படையில்தான் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு பெற முடியும்.*
- *இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், நேரடியாக செலுத்தும் வரைவு காசோலை / அஞ்சலக காசோலை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*
- *தேர்வுக் கட்டணச் சலுகை கோரும் விண்ணப்பதாரர்களைத் தவிர ஏற்கனவே நிரந்தர பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தை செலுத்த வேண்டும். நிரந்தரப் பதிவு முறையில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்கள் நிரந்தர பதிவு முறையில் பதிவு செய்த நாளிலிருந்து 5 வருட காலத்திற்கு பதிவுக் கட்டணம் செலுத்துவதற்கு மட்டும் விலக்கு அளிக்கப்படும். இந்த நிரந்தரப் பதிவு இப்பதவிக்குரிய தேர்வுக் கட்டணமாக கருதப்படமாட்டாது.*

  *(தேர்வு கட்டணம் தொடர்பாக " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்" பத்தி – 2(V) ஐ காண்க).*

**7. சலுகைகள்**

(i) *ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (வ), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர், ஆதரவற்ற விதவை, முன்னாள் இராணுவத்தினர், நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் பிற வகையினைச் சார்ந்தவர்களுக்கான வயது / தகுதி மற்றும் கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 3(D),5 & 6 ஐக் காண்க.*

(ii) *மேலே குறிப்பிடப்பட்டுள்ள சலுகையை கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய ஆதாரங்களை தேர்வாணையம் கோரும்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.*

**குறிப்பு:**

*முன்னாள் இராணுவத்தினர், ஏதேனும் ஒரு பிரிவு / பணியில் அடங்கிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், பின்னர், வேறு எந்த நியமன நிகழ்வுகளிலும் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையை கோர முடியாது. (தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள் சட்டம் 2016பிரிவு 3(j) ல் குறிப்பிட்டுள்ளவாறு)*

**8. தேர்வுத்திட்டம்:-**

**(I) முதல்நிலை தேர்வு (கொள்குறி வகை )**

**கால அளவு- 2 மணி நேரம்** **அதிகபட்ச மதிப்பெண்கள் - 100**

| பாடம் | கேள்விகளின் எண்ணிக்கை | மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., | மி.பி.வ (வ), மி.பி.வ (ம) சீ.ம., மி.பி.வ, பி.வ., ( மு.தவிர) மற்றும் பி.வ.(மு) | "ஏனையோர் " |
| Law –I | 20 | 20 | 30 மதிப்பெண்கள் | 35 மதிப்பெண்கள் | 40 மதிப்பெண்கள் |
| Law –II | 20 | 20 | | | |
| Law –III | 20 | 20 | | | |
| Law –IV | 20 | 20 | | | |
| திறனறிவுத் தேர்வு | 20 | 20 | | | |
| மொத்தம் | 100 | 100 | | | |

**குறிப்பு:**

i) மேற்குறிப்பிட்ட குறைந்தபட்ச மதிப்பெண்களை விட குறைவான மதிப்பெண்கள் பெறும் விண்ணப்பதாரர்கள் முதன்மை தேர்விற்கு தகுதியுடையவர்களாக கருதப்படமாட்டார்கள்.

ii) முதல்நிலைத் தேர்வு என்பது விண்ணப்பதாரர்களை முதன்மை எழுத்து தேர்வுக்குத் தெரிவு செய்து அனுமதிக்க நடத்தப்படும் ஒரு தேர்வாகும். முதன்மை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்க தகுதியானவர்களாக அறிவிக்கப்படும் விண்ணப்பதாரர்கள், முதல்நிலை தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், அவர்களது இறுதித் தகுதியினை நிர்ணயிக்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

iii) வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும்.

**(II) முதன்மைத் தேர்வு (இளங்கலை பட்டப்படிப்புத் தரம் – விரித்தெழுதுதல் மற்றும் நேர்முகத் தேர்வு )**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் | | |
|---|---|---|---|---|---|
| பிரிவு-அ (எழுத்துத் தேர்வு) | | | ஆ.தி., ஆ.தி(அ), ப.ப., | மி.பி.வ(வ), மி.பி.வ., (ம) சீ.ம., மி.பி.வ பி.வ., ( மு.தவிர) மற்றும் பி.வ.(மு) | "ஏனையோர் " |
| தாள் –I (Law –I) | 3 மணி நேரம் | 100 | 140 | 160 | 180 |
| தாள் –II (Law –II) | 3 மணி நேரம் | 100 | | | |
| தாள் –I II (Law –III) | 3 மணி நேரம் | 100 | | | |
| தாள் –IV (Law –IV) | 3 மணி நேரம் | 100 | 18 (அனைத்து பிரிவினருக்கும்) | | |
| பிரிவு-ஆ வாய்மொழித் தேர்வு (நேர்முகத் தேர்வு) | --- | 60 | | | |
| மொத்தம் | | 460 | | | |

குறிப்பு:

i) வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைக்கப்படும்.

ii) தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு ஆஜராகும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விண்ணப்பதாரர்களின் விதிமுறையில் பத்தி 17ஐ காண்க.

iii) மேற்காணும் ஏதேனும் ஒரு தேர்விற்கோ மற்றும் வாய்மொழித் தேர்விற்கோ வராத நபர்கள் இறுதி தெரிவிற்கு கருதப்படமாட்டார்கள். விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 18(b)(vii)(a))

iv) மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டம் (முதல்நிலை மற்றும் முதன்மைத் தேர்வு) இவ்வறிக்கையின் பிற்சேர்கை III & IV- இல் உள்ளது.

**9. *தெரிவுசெய்யும் முறை***

**தெரிவு மூன்று நிலைகளை உடையது. 1. முதல்நிலை தேர்வு 2.முதன்மைத் தேர்வு 3. நேர்காணல் தேர்வு வடிவில் அமைந்த வாய்மொழித் தேர்வு . இறுதி தெரிவானது விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும், வாய்மொழித் தேர்விலும் சேர்த்து பெற்ற மொத்த மதிப்பெண்கள், பணியிட ஒதுக்கீட்டு விதி ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வின் அனைத்து பாடங்களிலும் வாய்மொழித் தேர்விலும் கலந்துகொள்வது கட்டாயமாகும். எழுத்துத் தேர்வின் ஏதேனும் ஒரு பாடத்தில் தேர்வு எழுதாத (எழுத தவறி இருந்தாலும்) விண்ணப்பதாரர் அத்தெரிவிற்கான குறைந்தபட்ச மதிப்பெண்களை பெற்றிருந்தாலும் கூட தெரிவு செய்யப்பட தகுதியானவராக கருதப்படமாட்டார். "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 18 (A) & (B) ஐக் காண்க.**

**10. *தேர்வு மையங்கள்***

***அ. முதல்நிலை தேர்வு கீழ்காணும் தேர்வு மையங்களில் நடைபெறும்.***

| *வரிசை எண்* | *மையத்தின் பெயர்* | *மையக் குறியீட்டு எண்* |
|---|---|---|
| 1. | *சென்னை* | 0101 |
| 2. | *மதுரை* | 1001 |
| 3. | *கோயம்புத்தூர்* | 0201 |
| 4. | *திருச்சிராப்பள்ளி* | 2501 |
| 5. | *திருநெல்வேலி* | 2601 |

***ஆ. முதன்மை தேர்வு சென்னை மையத்தில் மட்டும் நடைபெறும்.***

***குறிப்பு***

(i) ***மேற்குறிப்பிட்டுள்ள தேர்வு மையங்களில் ஏதேனும் இரண்டு விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விற்காக தேர்ந்தெடுக்க வேண்டும். மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரரை பொறுத்தவரையில். ஒரு மாவட்டத்தை மட்டும் தேர்ந்தெடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 2(R) ஐக்" காண்க)***

(ii) ***தேர்வு மையத்தை மாற்ற அனுமதிக்கப்படமாட்டாது. (மேலும் விவரங்களுக்கு " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 17(A)(ii) ஐக்" காண்க)***

(iii) ***தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரர்களை வேறு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.***

(iv) ***விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதுவதற்கும்/ சான்றிதழ் சரிபார்ப்புக்கும்/ கலந்தாய்விற்கும் தங்களது சொந்த செலவில் வரவேண்டும்.***

<u>11. அ) பணி விவரங்கள்</u>

விண்ணப்பதாரர், இணைய வழியில் விண்ணப்பிக்கும்போது,இந்திய அரசின் அல்லது இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசின் பணியில் அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் அரசு சார்புள்ள நிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களில் நிரந்தரப் பணியில் அல்லது தற்காலிகப் பணியில் இருப்பின், தங்களது பணி குறித்த விவரத்தினை தேர்வாணையத்திற்கு தெரிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரர்; பணி குறித்த உண்மையை மறைக்கும் பட்சத்தில், அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரர், தங்களுடைய விண்ணப்பங்களை துறைத்தலைவர் வாயிலாகவோ அல்லது தாம் வகித்து வரும் பதவிக்கு நியமனம் செய்வதற்கு தகுதிபெற்ற அலுவலர் மூலமாகவோ அனுப்பத் தேவையில்லை. மாறாக, தமது துறைத்தலைவருக்கு, தாம் தேர்வாணையத்தின் எந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கிறார் என்பதை எழுத்து மூலம் தெரிவித்து, தெரிவாகும் பட்சத்தில் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 14 (p) -ல் குறிப்பிட்டுள்ளவாறு தடையின்மைச் சான்றிதழை சமர்பிக்க வேண்டும்.

<u>ஆ) குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான உறுதிமொழி</u>

(i) இணைய வழி விண்ணபத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள், அது தொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப) கண்டிப்பாகப் பதிவேற்றம் / சமர்ப்பிக்க வேண்டும். கோரும்பொழுது மேற்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரர்கள், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டணை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணைய வழி விண்ணபத்தில் தெரிவிப்பதுடன், கோரும்பொழுது தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆணையினை பதிவேற்றம் / சமர்பிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட ஆவணங்ளை சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் விண்ணபம் நிராகரிக்கப்படும்.

(iii) தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணைய வழி விண்ணபத்தினை சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன் வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டணை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர்கள் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் இரத்து செய்யப்பட்டு, ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கி வைக்கப்படுவர். (விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 14(S) உள்ளவாறு)

<u>12. பொதுவான தகவல்கள்</u>

A) இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும்.

B) (i) தமிழ்வழிக்கல்வி மூலம் படித்த நபர்களுக்கு, மாநிலத்தின் கீழ் உள்ள பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம்செய்யும் (திருத்த) சட்டம் 2020-ன் பிரிவு 2 (d)- ல் சொல்லப்படுவதாவது: தமிழ் வழியில் படித்த நபர் என்றால், மாநிலத்தில் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பப்படும் பதவிகளுக்கான சிறப்பு விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் படித்தவராவார்.

(ii) தமிழ்வழியில் கல்வி பயின்றதற்கான உரிமை கோரும் விண்ணப்பதாரர்கள், அதற்கான சான்றாவணமாக, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மாற்றுச்சான்றிதழ் / தற்காலிகச்சான்றிதழ் / பட்டச்சான்றிதழ் / மதிப்பெண்பட்டியல் / நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை விண்ணப்பதாரர் தமிழ் வழியில் பயின்றுள்ளார் என பதிவு செய்யப்பட்டு, குழுமம் அல்லது பல்கலைக்கழகம் அல்லது

கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பட்டச் சான்றிதழ் / பட்ட மேற்படிப்புச் சான்றிதழினை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(iii) விண்ணப்பதாரர்கள், நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரைக்கும் அனைத்துக் கல்வித் தகுதியினையும் தமிழ் வழியில் பயின்றுள்ளார் என்பதற்கு ஆதாரமான சான்றுகளை கட்டாயம் பதிவேற்ற / சமர்ப்பிக்க வேண்டும்.

உதாரணம்:-

ஒரு பதவிக்கு பட்டப் படிப்பு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியாக இருப்பின், விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு, மேல்நிலைக் கல்வி மற்றும் பட்டப் படிப்பினை கட்டாயம் தமிழ் வழியில் பயின்றிருக்க வேண்டும்.

(iv) தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றாவணம் எதுவும் இல்லையெனில், கல்வி நிறுவனத்தின் பதிவாளர் / முதல்வர் / தலைமையாசிரியர் / தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரிடமிருந்து விண்ணப்பதாரர்களின் விதிமுறைகளில் குறிப்பிட்டுள்ள படிவத்தில், நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரையிலான ஒவ்வொரு கல்வித் தகுதிக்கும் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(v) நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரையிலான அனைத்து கல்வித் தகுதிகளையும் தமிழ் வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என்பதற்கான ஆதாரச் சான்றினை பதிவேற்ற / சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

(vi) ஏதேனும் ஒரு பாடத்தை பகுதிநேரமாக படித்ததற்காகவோ / ஏதேனும் தேர்வினை தனித் தேர்வராக எழுதியதற்காகவோ, தனியர் தமிழ் வழிக் கல்வியில் பயின்றுள்ளார் என சான்றாவணம் ஏதேனும் சமர்ப்பித்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில் உள்ள பத்தி 14(R) ஐக்" காண்க)

C) இப்பதவிக்குரிய தெரிவு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு தற்காலிகமாக தெரிவு செய்யப்படும்.

D) தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 26 மற்றும் 27(இ)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கான இடஒதுக்கீடு இப்பதவிக்கு பொருந்தாது.

E) <u>நிர்ணயிக்கப்பட்டகுறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் :-</u>

அரசாணை (நிலை) எண்.23, மாற்றுத்திறனாளிகள் நலத்(DAP3-2) துறை, நாள் 20.07.2018-ன் படி இப்பதவி கீழ்க்காணும்நிர்ணயிக்கப்பட்டகுறைபாடுடையமாற்றுத் திறனாளிகளுக்கும் பொருந்தும். [கை.கா.இ.கு – கை கால் இயக்கக் குறைபாடு; தொ. நோ.கு - தொழுநோயிலிருந்து குணமடை ந்தோர்; கு.த – குள்ளத் தன்மை; அ.வீ.பா – அமில வீச்சினால் பாதிக்கப்பட்டோர்].

F) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் (மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறை (Divyangjan), சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்திய அரசு) குறிப்பிடப்பட்டுள்ளபடிவத்தில் அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத்திறனாளிகள் (DAP.3.1) நலத்துறை, நாள் 27.07.2018-ல், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

(விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 14(M)ஐக் காண்க).

*G)* நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் காலிப்பணியிடங்களில் குறைந்தபட்சம் 30% பெண்களுக்காக ஒதுக்கீட்டில்தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த போதிய பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் அதே வகுப்பினரை சார்ந்த தகுதிவாய்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும். (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 26(5)-ல் குறிப்பிட்டுள்ளவாறு).

*H)* ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்கும் மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த

*விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும். (தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம்* 2016, *பிரிவு* 27*ல் குறிப்பிட்டுள்ளவாறு).*

*I) இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கான ஆவணச் சான்றுகளை தேர்வாணையம் கேட்கும் நேரத்தில் பதிவேற்ற / சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படாமல் பின்னர் கோரப்படும் எந்தவொரு மாற்றமும், கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது. குறிப்பிட்ட காலநேரத்திற்குள் ஆவணங்களை பதிவேற்ற/ சமர்ப்பிக்கத் தவறினால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ய பிறகு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.*

*J) கீழ்க்காணும் உண்மைகளை மறைக்கும்பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தால் நிரந்தரமாகவோ அல்லது தக்கதென கருதப்படும் காலம் வரையில் விலக்கிவைக்கப்படுவர்.* (i) *முந்தைய தேர்வுகளில் கலந்துகொண்டது மற்றும் இலவச சலுகையை பயன்படுத்தியது.* (ii) *அரசு அல்லது மத்திய மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத் துறை கழகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ / தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது / பணிபுரிந்தது.* (iv) *குற்றவியல் நிகழ்வுகள், கைதானது, குற்றங்களுக்கான தண்டனை பெற்றது.* (v) *மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களினால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது.*

K) *கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை / தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், குற்ற நடவடிக்கை (அல்லது) ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருத்தல்/ முடிவுற்றிருத்தல், கிளர்ச்சி (அல்லது) ஏதேனும் அரசியலமைப்பில் பங்கேற்று பாராளுமன்ற / மாநில சட்டசபை / உள்ளாட்சி தேர்தல்களில் பங்கேற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை, விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தீர்ப்பின் அசல் / ஆணை / அரசாணை/ துறை நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை அல்லது இதர ஆவணங்களை தேர்வாணைய வலைதளத்தில் சான்றிதழ்கள்பதிவேற்றம் செய்யும் போது தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், நியமனம் பெறும் காலம் வரை எப்போது ஏற்பட்டிருப்பினும் உடனடியாக தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். தவறினால், தகுந்த தண்டனைக்குரிய நடவடிக்கையை தேர்வாணையம் எடுக்கும்.*

*L) இடஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள்/ தகுதிக்கான காரணிகளான வயது, பாலினம்,வகுப்பு பிரிவுகள், கல்வித் தகுதி, பயிற்று மொழி, உடற் தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல் கொண்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ய பிறகு நிராகரிக்கப்படும்.*

*M) நிரந்தரப்பதிவு என்பது எந்தவொரு பதவி/ நியமனத்துக்கான விண்ணப்பமாக கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களால் நிரந்தரப்பதிவில் பொதுவான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பினும் இந்தத் தேர்வுக்குரிய விண்ணப்பத்தில் அளிக்கப்படும் விவரங்கள் / தகவல்கள் மட்டுமே இத்தேர்வுக்கு பரிசீலிக்கப்படும். இந்த நியமனத்திற்கான இணையவழி விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேவையான விவரங்கள் / தகவல்கள் தவறானதாக அல்லது முழுமை பெறாதவையாக இருந்தால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.*

N) *மூன்றாம் பாலினத்தவரின் வகுப்பு நிர்ணயம் குறித்து அரசாணை நிலை எண்.*90, *சமூக நலம் மற்றும் சத்துணவுத்* [sw8(2)] *துறை,நாள்.* 22.12.2017-*இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

<u>O) *மூன்றாம் பாலினத்தவரின் வகுப்பு நிர்ணயம்-:*</u>

i) *எந்த ஒரு சாதிச் சான்றிதழும் இல்லாத மூன்றாம் இன பாலின விண்ணப்பதாரர்கள் தங்களது இணைய வழி விண்ணப்பத்தில் அரசாணை(நிலை) எண்.* 28, *பிற்படுத்தப்பட்டவகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்* 06.04.2015-*ன்படி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ அல்லது ஏனையோர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.*

ii) *சாதிச் சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிட (அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த மூன்றாம் பாலின விண்ணப்பதாரர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.*

iii) ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட(அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச்சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச்சான்றிதழ் பெற்றுள்ள மூன்றாம் பாலின விண்ணப்பதாரர், அவருடைய வகுப்பு (class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒருமுறைப் பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அதன் பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.

[விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 14F(vi)-(xi)ஐக் காண்க]

P) <u>வேலைவாய்ப்பில் மூன்றாம் பாலின விண்ணப்பதாரர்களுக்கான இட ஒதுக்கீடு:-</u>

1. மூன்றாம் பாலின விண்ணப்பதாரர்களின் பெண் என தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் விண்ணப்பதாரர் பெண்களுக்கான 30 சதவிகிதம் மற்றும் பொதுப்பிரிவினருக்கான 70 சதவிகிதம் (ஆண் மற்றும் பெண்) ஆகிய இரண்டு இட ஒதுக்கீட்டின் கீழும் கருதப்படுவர்.
2. மூன்றாம் பாலின விண்ணப்பதாரர்களின் "ஆண்" அல்லது "மூன்றாம் பாலினத்தவர்" என தன்னை அடையாளப்படுத்திகொள்ளும் விண்ணப்பதாரர் பொதுப்பிரிவினருக்கான 70 சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் கீழ் (ஆண் மற்றும் பெண்) கருதப்படுவர்.

தமிழ்நாடு மூன்றாம் பாலினத்தவர்களுக்கான நல வாரியத்தில் இருந்து பெறப்பட்ட மூன்றாம் பாலினத்தவர்கள் / மூன்றாம் பாலின ஆண்கள் / மூன்றாம் பாலின பெண்கள் சான்றிதழ் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே மேற்குறிப்பிட்ட இட ஒதுக்கீடு பொருந்தும்.

<u>13) ஏனைய முக்கிய அறிவுரைகள்</u>

அவிண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதி செய்தல் (:-தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தரப்பட்டுள்ள அறிவுரைகளை நன்கு படித்த பின்னர் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளனரா என உறுதி செய்து கொள்ள வேண்டும். எழுத்துத் தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்பு / நேர்முகத் தேர்வு / கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக விண்ணப்பதாரரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, ஒரு விண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராக மாட்டார். எனவே, விண்ணப்பதாரரின் விண்ணப்பம், எல்லா நிலைகளிலும் தற்காலிகமானது மற்றும் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன என்று கண்டறியப்படும் பட்சத்தில், எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு. [விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -11 (B) (C) & (D) -ல் உள்ளவாறு].

ஆ) தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டுகள், www.tnpscexams.in / www.tnpsc.gov.in என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். அனுமதிச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.. [விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -2 (V) (g) -ல் உள்ளவாறு].

இ) தெளிவுரை வேண்டுவோர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரில் அல்லது 1800 425 1002 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம், அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 5.45 மணி வரை தொடர்பு கொள்ளலாம். [விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி -2(V) –ல் குறிப்பு (h)(i)(j)-ல் உள்ளவாறு].

உ) விண்ணப்பதாரர்களுக்கான தகவல் பரிமாற்றம்:சான்றிதழ் சரிபார்ப்பு/ வாய்மொழித் தேர்வு / கலந்தாய்விற்கான நாள் மற்றும் நேரம் குறித்த தகவல்கள் ஏதும் விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படாது. இது குறித்த தகவல்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும். மேற்கூறிய தகவல் விண்ணப்பதாரர்களுக்குகுறுஞ்செய்தி/ மின்னஞ்சல் ஆகியவற்றின் மூலம் மட்டுமே விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் ஏதேனும் காரணங்களினால் சென்றடையாமல் / கிடைக்கப்பெறாமல் இருப்பின் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

*ஊ) விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட பின் தெரிவு பணிகள் முழுவதுமாக முடிவுறாமல் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் எவ்வித தகவலும் வழங்கப்படமாட்டாது.*

*எ) கைப்பேசி மற்றும் இதர மின்னணு சாதனங்களுக்குத் தடை:*

1) *விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருட்களான கருப்பு பந்துமுனை பேனா தவிர. மின்னணு சாதனங்களானதரவி (Blue Tooth) கைப்பேசி, நினைவூட்டு உள்கட்டமைப்புக் குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரம் அல்லது ஏனைய மின்னணு சாதனங்கள், மின்னணு அல்லாத பதிவுக்கருவிகள், புத்தகங்கள், குறிப்புகள், கைப்பை வண்ண எழுது கோல், பென்சில் புத்தகங்கள், குறிப்புகள், தனித் தாள்கள், கணித மற்றும் வரைப்படக் கருவிகள், மடக்கை அட்டவணை, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சி வில்லைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் பொதுக் குறிப்புத் தாட்கள் மற்றும் பதிவுசெய்யும் தனிக்கருவிகளாகவோ மோதிரம் அல்லது கைக்கடிகாரத்தின் இணைப்பாகவோ கொண்டுவரக் கூடாது.*
2) *அவ்வாறான பொருட்களை வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின், அவ்விடத்திலேயே முழுச் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.*

3) *விண்ணப்பதாரர்கள் தங்கள் கைப்பேசி உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களை தேர்வுக்கூடத்திற்கு கொண்டுவர வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதுடன், அப்பொருட்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.*

*(மேலும் விவரங்களுக்கு " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் 17(E) ஐக் காண்க)*

*ஏ) விண்ணப்பதாரர்கள் தங்களது வயது, கல்வித்தகுதி, அனுபவம், சாதி மற்றும் உடற்குறைபாடு தொடர்பான சான்றிதழ்கள் மற்றும் ஏனைய சான்றிதழ்களை தேர்வாணையம் குறிப்பிட்டு கோராத பட்சத்தில் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பத் தேவையில்லை. அவை, தேர்வாணையம் கோரும் தருணத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும். தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அத்தேர்விற்கு அனுமதிக்கப்பட அனைத்து தகுதிகளையும் பெற்றவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களை தேர்வாணையம் ஐயமறத் தெரிந்து கொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பங்கள் எழுத்துத் தேர்விற்கு (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாக ஏற்கப்பட்டுள்ளதாகவே கருதப்படும். விண்ணப்பதாரர் தேர்விற்கு முன்போ அல்லது பின்னரோ நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் என்று தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால், எந்நிலையிலும், அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை உண்டு.*

*ஐ) தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால், விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் நேரிடும்.*

*ஒ) ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:*

*தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல்/ பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது.*

*ஓ) தேர்வுக் கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:*

*தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ (அல்லது) தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ (அல்லது) தேர்வாணையத்தால் தேர்வினை நடத்த பணியில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் / பணியாளர்களை தாக்கும் முயற்சியிலோ ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுமையான தவறாக கருதப்பட்டு, அவ்விண்ணப்பதாரர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.*

*ஔ) விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை மீறும் பட்சத்தில் விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி 17(E)ன்படி அல்லது தேர்வாணையம் பொருத்தமானதெனக் கருதும் தண்டனை விதிக்கப்படும்.*

ஃ) கொள்குறி வகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வு நடைபெற்ற நாளிலிருந்து 3 நாட்களுக்குள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும் தேர்வாணையத்தால் வெளியிடப்படும் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தொடர்பாக முறையீடு செய்ய வேண்டுமானால் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள Answer Key Challenge என்ற சாளரத்தைப் பயன்படுத்தி முறையீடு செய்யலாம் (Result–>Answer keys)

விண்ணப்பதாரர்கள் கொள்குறிவகைத் தேர்விற்கான உத்தேச விடைகள் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்ட 7 நாட்களுக்குள் இணையவழி வாயிலாக மட்டுமே முறையீடு செய்யவேண்டும். அஞ்சல் வழியாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கான அறிவுரைகள் மற்றும் வழிமுறைகள் தேர்வாணைய இணையதளத்திலேயே வழங்கப்பட்டுள்ளது. மேலும் முறையீடு செய்ய இணையவழி மூலமாகவோ அல்லது வேறுவழியாகவோ வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் முடிவுற்ற நிலையில் பெறப்படும் எவ்வித முறையீடுகளும் பரிசீலிக்கப்படமாட்டாது.

இணையவழியில் உத்தேச விடைகளை முறையீடு செய்வதற்கு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளானது ஒவ்வொரு பாடத்திற்கென வல்லுநர்களை கொண்ட குழுவிற்கு பரிந்துரைக்கப்படும். மேலும், வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இறுதியான விடைகள் முடிவு செய்யப்பட்டு அதன்பின்னர் விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணியானது தொடங்கப்படும்.

தெரிவுப் பணிகள் முடிவடையும் வரை இறுதியான விடைகளை தேர்வாணையம் வெளியிடாது.

தேர்வு நடைமுறைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், அத்தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர் அனைவருடைய விவரங்களும் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

[மேலும் விவரங்களுக்கு " விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள் பத்தி (17(D)(V)–(XIII)ஐக் காண்க)

<u>14. விண்ணப்பிக்கும் முறை</u>

1. விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in / www.tnpscexams.in ஆகிய தேர்வாணையத்தின் இணையதளங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
2. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்கும் முன்பு ஆதார் எண் மூலம்ஒருமுறைப்பதிவு எனப்படும் நிரந்தரப்பதிவு (OTR) மற்றும் தன்விவரப்பக்கம் (Dashboard) ஆகியன கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் நிரந்தர பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை நடைமுறையிலிருக்கும், தங்களுக்குரிய ஒரு முறைப் பதிவு கணக்கு (One Time Registration ID) மற்றும் கடவுச் சொல் மூலமாக மட்டுமே விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஒருமுறைப்பதிவில் பதிவேற்றம்செய்ய, விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம், கையொப்பம் ஆகியவற்றை CD/DVD/Pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் பதிவு செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்.
4. ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப் பதிவுக் கணக்கை (One Time Registration ID) உருவாக்க அனுமதியில்லை.
5. விண்ணப்பதாரர்கள் தங்களுக்குரிய தனித்துவமான பதிவுக்கணக்கு மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி ஏற்கனவே பதிவிட்ட தங்களது விவரங்களை பார்வையிடவும், புதுப்பிக்கவும் செய்யலாம். தங்களது ஒருமுறைப் பதிவு , கடவு சொல்லினை வேறு நபரிடமோ (அ) முகவர்களிடமோ பகிர்ந்து கொள்ள கூடாது.
6. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான விண்ணப்பம் அல்ல. இது விண்ணப்பதாரர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கு தன்விவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், அறிவிக்கையில் "Apply" என்ற உள்ளீடு வழியே நிரந்தரப்பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பதவியின் பெயரை தெரிவு செய்ய வேண்டும்.

8. புகைப்படம், குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் கையொப்பம் இல்லாமல் அனுப்பப்படும் இணையவழி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

9. இணையவழி விண்ணப்பத்தில் சில தளங்கள் திருத்த இயலாது. எனவே, விண்ணப்பதாரர்கள் மிகுந்த கவனத்துடன் விவரங்களைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில், விண்ணப்பதாரர்களின் விவரங்கள் இறுதியானவையாகக் கருதப்படும். இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு திருத்தம் கோரி தேர்வாணையத்தில் பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது.

10. <u>அச்சிடுதலில் விருப்பதேர்வு</u>

அ) விண்ணப்பத்தை இணைய வழியில் அனுப்பியபின், விண்ணப்பதாரர்கள் PDF முறையில் தங்கள் விண்ணப்பத்தை அச்சிட / சேமிக்க முடியும்.

ஆ) விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப நகல் தேவைப்பட்டால், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி அச்சிட்டுக் கொள்ளலாம் / பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

இ) இணையதள விண்ணப்ப அச்சுப்படி அல்லது வேறு எந்தவிதமான ஆதார ஆவணங்களையும் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டாம். விண்ணப்பதாரர்கள், தேர்வுக்குப்பின் அடுத்த கட்ட தெரிவிற்கு வரும் பொழுது மட்டுமே விண்ணப்பம் மற்றும் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

(விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி-2-ல் உள்ளவாறு)

<u>15. ஆவணங்கள் பதிவேற்றம்</u>

விண்ணப்பதாரர்களால் இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்களை உரிமை கோரல்களை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ் /ஆவணங்களை தேர்வாணையம் கோரும் நேரத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். உரிய நேரத்தில் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்யப்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பமானது நிராகரிக்கப்படும். (விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகள்" பத்தி-13 –ல் உள்ளவாறு)

<u>16. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்</u>

இணையவழி மூலம் 24.09..2021 அன்று இரவு 11.59 மணி வரை விண்ணப்பிக்கலாம். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை" தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in-ல்காணலாம்)

## மறுப்பு (DISCLAIMER)

***இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளத்தில் உள்ளன. எனினும், விண்ணப்பதாரர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் இத்தேர்விற்கான விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலோ அல்லது அதற்கு முன்போ இணைக்கல்வி ஏதேனும் இருப்பின் அது குறித்த தகவலை விண்ணப்பத்தில் தெரிவித்தும், மேலும் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யும் போது அவ்வரசாணைகளையும் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும். இத்தேர்வின் விளம்பர அறிவிக்கை நாளிற்கு பின்பு வெளியிடப்பட்ட இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது..***

***செயலாளர்***

**Annexure-I**

## Abstract

Social Welfare and Nutritious Meal Programme Department – Third Gender Welfare – Determination of the Community and Reservation in Employment for Third Gender – Orders – Issued.

---

**Social Welfare and Nutritious Meal Programme [SW8 (2)] Department**

**G.O.(Ms) No.90** **Dated 22.12.2017**
ஹேவிளம்பி, மார்கழி 7
திருவள்ளுவர் ஆண்டு 2048

**Read:**

1. G.O. (Ms) No.127, Labour and Employment Department, dated 27.10.2014
2. G.O. (Ms) No.28, Backward Classes, Most Backward Class and Minorities Welfare Department, Dated 06.04.2015
3. G.O. (Ms) No.71, Social Welfare and Nutritious Meal Programme Department, Dated 06.11.2015

**Read also:**

4. From the Secretary, Tamil Nadu Public Service Commission, D.O.Letter No.4471/RND-D2/2013, dated 12.07.2016
5. From the Director of Social Welfare, Letter Roc.No.21096/WW.1(3)/ 2017, dated 31.07.2017

*******

**ORDER:-**

In the Government Order first read above, orders were issued that Third Gender may register their names in Employment Exchange offices based on the certificate identifying them as Transgender issued by the Tamil Nadu Transgender Welfare Board (TGWB) and to sponsor their names for appointment in the vacancies reserved for women category namely 30% and as well as vacancies reserved for General Category (both Men and Women) namely 70%.

2. In the Government Order second read above, orders were issued classifying the "Transgender of Eunuch (Thirunangai or Aravani)" as Most Backward Class by including at Sl.No.36-C in the list of Most Backward Classes.

3. In the Government Order third read above, among other things orders were issued, that Transgender will be identified as 'Third Gender' apart from the Binary Gender System and they have the right to decide their self-identified gender as male or female or as the third gender.

4. The Secretary, Tamil Nadu Public Service Commission in the D.O. letter fourth read above has sought for following clarifications in this matter with regard to:-

(i) Considering the Transgender under 30% reservation for Women

(ii) Treating the Transgender candidates who have claimed communal status under Scheduled Caste/ Scheduled Caste (A)/ Scheduled Tribe by producing respective Community Certificate confirming their claim.

5. After careful examination, in consultation with the concerned departments and the Director of Social Welfare, the Government hereby issue the following order regarding the determination of community and reservation in employment for the Third Gender in order to streamline the procedures to be followed by the recruiting agencies like Tamil Nadu Public Service Commission, Teachers Recruitment Board, Uniformed Services Recruitment Board, Medical Recruitment Board, etc., and Employment Exchange offices / appointing authorities, in sponsoring / recruiting / selecting the Third Gender candidates for appointment in Government Service:-

**Determination of the Community:-**

(i) The Third Gender candidates, who do not possess any community certificate may be considered under Most Backward Class as per G.O.(Ms).No.28, Backward Classes, Most Backward Class and Minorities Welfare Department, dated 06.04.2015.

(ii) The Third Gender candidates who belong to Scheduled Caste/Scheduled Caste (A)/Scheduled Tribe communities, and possess community certificate as such, may be considered as per their respective community.

(iii) The Third Gender candidates who belong to the communities other than Scheduled Caste/Scheduled Caste (A)/Scheduled Tribe and possess community certificate as such (not covered under point (i) above) may be considered as per their own community or as Most Backward Class whichever is advantageous to them as per their option and once the individual exercises option for community selection it should be crystallized and this option should not be changed in future.

**Reservation in Employment:-**

(i) The Third Gender candidates who identify themselves as "Female" by self-declaration supported by the certificate (ID card) issued by the Tamil Nadu Third Gender Welfare Board (TNTGWB) may be considered against both 30% reservation for women as well as 70% reservation for the General category (both Men & Women).

(ii) The Third Gender candidates, who identify themselves as "Male" or "Third Gender", may be considered against the 70% reservation for General category (both Men & Women) as the case may be.

The above concessions may be granted subject to production of certificate identifying them as Third Gender or Third Gender (Male) or Third Gender (Female) issued by the Tamil Nadu Third Gender Welfare Board (TNTGWB), as the case may be.

(By Order of the Governor)

K. Manivasan,
Principal Secretary to Government

To
The Director of Social Welfare, Chennai-15
The Commissioner of Social Defence, Chennai-10

The Director, Integrated Child Development Services Scheme, Chennai-113
The Secretary, Tamil Nadu Public Service
Commission, Chennai-3
All District Collectors
All Departments of the Secretariat, Chennai-9
The Commissioner of Backward Classes and Minorities Welfare, Chennai-5
The Director of Most Backward Class and Denotified Communities, Chennai-5
The Director of Adi Dravidar Welfare, Chennai-5
The Director of Tribal Welfare, Chennai-5
The Member Secretary, Tamil Nadu Backward Classes Commission, Chennai-4
The Teacher Recruitment Board, Chennai-6
The Tamil Nadu Uniformed Services Recruitment
Board, Chennai-8
The Medical Services Recruitment Board, Chennai –6
The Director of Employment and Training, Chennai-32
The Secretary to Government of India, Ministry of Social
Justice and Empowerment, New Delhi

**Copy to:**
The Hon'ble Chief Minister's Office, Chennai-9
The Senior Personal Assistant to the Minister for Social Welfare and Nutritious Meal Programme, Chennai-9
All Sections in Social Welfare and Nutritious Meal Programme Department, Chennai-9
Stock file/Spare copy

// Forwarded by Order //

V.T.
Section Officer

27.12.17

## ANNEXURE – II

## FORMAT FOR EXPERIENCE CERTIFICATE

This is to certify that Mr/Mrs/Miss…………………..Son/Daughter/Wife of …………………………………………...Age……………... permanently residing at No……………………………………..Mr/Mrs/Miss………………………..…….was enrolled as an Advocate on ………………….and has been continuously practicing from ……………(date) to till date *. He/She has been regularly appearing in ………..courts, conducting cases on her/his own. She/He has passed B.L./M.L., degree in ……………….……………… year from the ……………………………………………..College/University.

* Notification date

Date: Signature, Name and Designations of the
Station: Presiding Officer/Competent Authority
Seal of the Court/Officer

**Note:-**

1. A certificate in the format prescribed in Annexure-II should be obtained from a **Senior Advocate** or from the **Presiding Officer** of……………………Court in support of the applicant's claim regarding the period of active practice in Criminal Courts.

2. The term "Senior Advocate" **herein** includes Additional Public Prosecutor/Public Prosecutor, President/Secretary of the Bar Associations and Advocates practicing for ten years and more in Taluks and Districts, besides the Senior Advocates practicing in the High Court and in the Supreme Court.

## ANNEXURE – III

**[ SYLLABUS FOR PRELIMINARY EXAMINATION ]**
**ASSISTANT PUBLIC PROSECUTOR, GRADE – II**
***LAW - DEGREE STANDARD (Objective type)***

**Part I ( LAW – I ) ( 20 Questions )**

The Indian Penal Code 1860 (with amendments as on date)

**Part – II ( LAW - II ) ( 20 Questions )**

1) The Criminal Procedure Code 1973 (with Amendments as on date)
2) The Indian Evidence Act, 1872 (with Amendments as on date)
3) The Civil Procedure Code 1908 (The Code of Civil Procedure (Amendment) Act, 2002)
(Specified Portions).

**Part – III ( LAW - III ) ( 20 Questions )**

1) The Constitutional Law (as amended by the Constitution (One Hundred and First (Amendment) Act, 2016) (Specified Portions).
2) The Human Rights Act, 1993 (As amended by the Protection of Human Rights (Amendment) Act, 2006 – No.43 of 2006)
3) Legal Aid
4) Torts (Specified Portions).

**Part – IV ( LAW – IV) ( 20 Questions )**

1) The Central Criminal Acts.
2) The Tamil Nadu State Minor Acts.

**Part V** – (**APTITUDE & MENTAL ABILITY) (20 Questions)**

Conversion of information to data - Collection, compilation and presentation of data -Tables,graphs, diagrams - Parametric representation of data – Analytical interpretation of data –Simplification – Percentage - Highest Common Factor (HCF)- Lowest Common Multiple(LCM)- Ratio and Proportion – Simple interest – Compound interest – Area- Volume-Time and Work – Behavioral Ability- Basic terms, Communications in information technology – Application of information and communication technology (ICT)- Decision making and problem solving. **Logical Reasoning:** Puzzles- Dice - Visual Reasoning - Alpha numeric Reasoning - Number Series - Logical Number/Alphabetical/Diagrammatic Sequences.

## ANNEXURE - IV

## [ SYLLABUS FOR MAIN EXAMINATION ]

## ASSISTANT PUBLIC PROSECUTOR, GRADE - II

***LAW - DEGREE STANDARD (Descriptive type)***

**SUBJECT CODE: 300**

**PAPER – I: LAW – I**

The Indian Penal Code 1860 (with amendments as on date)

Final Report and Framing of Charge and Translation

(a) Tamil to English

(b) English to Tamil from

- (i) Deposition
- (ii) Judgement
- (iii) Charge Sheet

**PAPER – II: LAW - II**

1) The Criminal Procedure Code 1973 (with Amendments as on date)
2) The Indian Evidence Act, 1872 (with Amendments as on date)
3) The Civil Procedure Code 1908 (The Code of Civil Procedure (Amendment) Act, 2002)

(Specified Portions).

**PAPER – III: LAW - III**

1) The Constitutional Law (as amended by the Constitution (One Hundred and First (Amendment) Act, 2016) (Specified Portions).
2) The Human Rights Act, 1993 (As amended by the Protection of Human Rights (Amendment) Act, 2006 – No.43 of 2006)
3) Legal Aid
4) Torts (Specified Portions).

**PAPER – IV: LAW – IV**

1) The Central Criminal Acts.
2) The Tamil Nadu State Minor Acts.

**PAPER –I: (LAW –I)**

THE INDIAN PENAL CODE, FINAL REPORT AND FRAMING OF CHARGE, INCLUDING TRANSLATION:

1) The Indian Penal Code
   (Amended as per Criminal Law (Amendment) Act 2013) : **50 Marks**

2) Final report and framing of Charges : **30 Marks**

3) Translation : (10x2=20 Marks) : **20 Marks**
   a) English to Tamil Translation
   b) Tamil to English Translation

---------------

**100 Marks**

---------------

Note: Questions will be asked to test the practical knowledge, current case laws and issue based problems.

**PAPER – II: (LAW – II)**

1) The Criminal Procedure Code 1973
   (Amended as per Criminal Law (Amendment) Act 2013) : **40 Marks**

2) The Indian Evidence Act
   (Amended as per Criminal Law (Amendment) Act 2013) : **40 Marks**

3) The Civil Procedure Code 1908
   (Amended as per Amendment Act 2002) : **20 Marks**

   Section 9 : Jurisdiction of Civil Courts
   Section 10 : Res Sub-judice
   Section 11 : Res-judicata
   Order VII : Plaint (Simple format)
   Order VIII : Written Statement (Simple format)
   Sec.148A - CAVEAT

---------------

**100 Marks**

---------------

**PAPER – III: (LAW – III)**

1. CONSTITUTIONAL LAW : **40 Marks**
    (i) Fundamental Rights
    (ii) Directive Principles of State Policy
    (iii) Writ Jurisdiction of the Supreme Court and High Court.
2. HUMAN RIGHTS : **20 Marks**
    The Protection of Human Rights Act, 1993 (full text)
3. LEGAL AID : **20 Marks**
    Legal Services Authority Act, 1987
    Lok Adalat System
4. TORTS : **20 Marks**

Negligence – Malicious Prosecution - Abuse of Legal Process

Accident claims – Vicarious liability

---------------

**100 Marks**

---------------

**PAPER – IV: (LAW –IV)**

**CENTRAL ACTS** : **50 Marks**

1. The Arms Act, 1959.
2. The Cable Televisions Network Regulating Act 1995( Amendment 2012)
3. The Child Marriage Restraint Act, 1929
    The Prohibition of Child Marriage Act,2006
    The Child Labour (Prohibition and Regulation) Act, 1986.
    The Child Labour (Prohibition and Regulation) Amendment Act 2016
4. The Cinematograph Act, 1952
5. The Copy Rights Act, 1957(Amendment Act, 2012)
6. The Dowry Prohibition Act, 1961.( Amendment Act 1986)
7. The Electricity Act, 2003 (Amendment Act, 2007)
8. The Essential Commodities Act 1955 (Amendment Act 2010)
9. The Explosives Act, 1884.
10. The Explosives Substances Act, 1908 (Amendment Act 2001)
11. The Immoral Traffic (Prevention) Act, 1956. (Amendment Act 1986)

12. The Juvenile Justice (Care and Protection) Child Act, 2000. (Amendment Act 2015)
13. The Prevention of Food Adulteration Act, 1954.
14. The Probation of Offenders Act, 1958. (Amendment Act 2009)
15. The Public Gambling Act, 1867
16. The Railway Property unlawful Possession Act, 1966.

(Amendment Act 2012)

17. The SC/ST Prevention of Atrocities Act, 1989. (Amendment Act 2015)
18. The Protection of Civil Rights Act, 1955.
19. The Prevention of Insults to National Honour Act, 1971.
 (Amendment Act 2005)
20. The Transplantation of Human Organs Act, 1994. (Amendment Act 2011)
21. The Indian Medical Council Act, 1956. (Amendment Act 2012)
22. The Information Technology Act, 2000. (Amendment Act, 2010)
23. The Identification of Prisoner's Act, 1920.
24. The Mental Health Act, 1987.
 The Mental Health Care Act 2017
25. The Indecent Representation of Woman (Prohibition) Act, 1986.
26. The Foreigners Act, 1946(Amendment Act 2004)
27. The Narcotic Drugs and Psychotropic Substances Act 1985.
28. The Benami Transaction (Prohibition) Amendment Act, 2016.
29. The Pre-natal Diagnostic Techniques (Regulation and Prevention of Misuse)Act, 1994.
30. The Prevention of Damage to Public Property Act 1984.

(Ten questions will be framed in the above Acts, each carrying five marks)

**TAMIL NADU STATE ACTS:** **50 Marks**

1. The Tamil Nadu City Police Act, 1888.
2. The Tamil Nadu Prevention of Dangerous Activities of Bootleggers, Drug-Offenders, Forest Offenders, Goondas, Immoral Traffic Offenders, Sand Offenders, Sexual Offenders, Slum-Grabbers and Video Pirates Act, 1982 (TN Act 14 of 1982) As Amended /Modified as of Acts 19 & 20 of 2014
3. The Tamil Nadu Prohibition Act, 1937 (Amendment Act, 2008)
4. The Tamil Nadu Gaming Act, 1930
5. The Tamil Nadu Forest Act No. 4 of 1882.
6. The Tamil Nadu Prohibition of Harassment of Women Act. 1998 (TN Act 44 of 1998).
7. The Tamil Nadu Prohibition of Ragging Act, 1997.
8. The Tamil Nadu Prohibition of charging of Exorbitant Interest Act, 2003.
9. The Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act, 1992 (Amended Act 46/1994).
10. The Tamil Nadu Open Places Disfigurement Prevention Act, 1959.
11. The Tamil Nadu Prize Schemes (Prohibition) Act, 1979.
12. The Tamil Nadu Prize Chits and Money Circulation Schemes Banning Act, 1978.

13. The Tamil Nadu Exhibition of Films of T.V. Screen through VCR and through Cable Television Network (Regulation) Rules. 1984.
14. The Tamil Nadu Kidneys (Authority or use of Therapeutic Purposes) Act, 1987.
15. The Tamil Nadu Open Places (Regulation of pasting of Posters and Fixing of Thatty Boards) Rules, 1995.
16. The Tamil Nadu Protection of Interests of Depositors (in Financial Establishments) Act, 1997.
17. The Tamil Nadu Clinical Establishments (Regulation) Act, 1997
18. Tamil Nadu Police Standing Order.

(Ten questions will be framed in the above Acts, each carrying five marks)

## பிற்சேர்க்கை - V

## தெரிவுமுறை குறித்த உத்தேச கால அட்டவணை

| வ.எண் | நிகழ்வு | கால வரிசை |
|---|---|---|
| 1. | முதல்நிலை தேர்வு முடிவு வெளியீடு | டிசம்பர் 2021 |
| 2. | சான்றிதழ் சரிபார்ப்பு | பிப்ரவரி 2022 |
| 3. | முதன்மைத் தேர்வு | மார்ச் 2022 |
| 4. | முதன்மைத் தேர்வு முடிவு வெளியீடு | ஜீலை 2022 |
| 5. | நேர்முகத் தேர்வு | ஆகஸ்ட் 2022 |
| 6. | கலந்தாய்வு | ஆகஸ்ட் 2022 |

செயலாளர்